# தொழில் துறையில் தமிழ்நாட்டை நெ.1 மாநிலமாக்குவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

தொழிற்சாலைகளில்தான் பணிபுரிகிறார்கள்!

- 2024-25-ஆம் ஆண்டில், 30.50 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு ஏற்றுமதி செய்த இந்திய அளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கிறோம்!
- ஏற்றுமதியில் முதல் நான்கு மாநிலங்களில், 2021-22-ஆம் ஆண்டில் இருந்து, தொடர்ந்து ஏற்றுமதி மதிப்பு அதிகரித்து வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்!
- தொழில் வளர்ச்சிக்கும் - தொழில் துறையினருக்கும் - தொழிலாளர்களின் நலனுக்கும் என்னவெல்லாம் தேவை என்று உன்னிப்பாகக் கவனித்து செயல்படுவதால் தான், இதெல்லாம் சாத்தியமானது!
- பல்வேறு சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ் கடந்த நான்காண்டுகளில் 59 ஆயிரத்து 915 புதிய தொழில் முனைவோருக்கு 2 ஆயிரத்து 31 கோடி ரூபாய் மானியத்துடன் 5 ஆயிரத்து 209 கோடியே 51 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப் பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றாலே தொழில் வளர்ச்சிதான்! அதிலும் M.S.M.E-க்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்போம்... அதனால்தான், நாட்டிலேயே முதன் முதலாக 2008-ஆம் ஆண்டிலேயே, M.S.M.E-க்கு என்று தனிப்பட்ட பாலிசியை வெளியிட்டோம்!

**எம்.எஸ்.எம்.இ. நிறுவனங்களுக்கு ரூ.1,381.91 கோடி அரசு மானியம்!**

அதேபோல் கடந்த நான்காண்டு களில் முதலீட்டு மானியம், மின் மானியம், ஊதியப் பட்டியல் மானியம், பின் முனை வட்டி மானியம் என்று பல்வேறு இனங்களில், 19 ஆயிரத்து 931 M.S.M.E நிறுவனங்களுக்கு ஆயிரத்து 381 கோடியே 91 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கியிருக்கிறோம்.

வேலைவாய்ப்பை உருவாக்குவதில், வேளாண்மைக்கு அடுத்த இடத்தில் M.S.M.E-க்கள்தான் இருக்கிறது! எனவே, இந்த நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை விரைந்து பெற்றுத்தர தமிழ்நாடு அரசு தொடர்ந்து உழைத்துக் கொண்டு வருகிறது.

சென்னை மற்றும் மதுரை வசதியாக்கல் குழுக்களை இரண்டாகப் பிரித்து, புதிதாக வேலூர் மற்றும் தூத்துக்குடி வசதியாக்கல் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக 794 M.S.M.E-க்களுக்கு வரவேண்டிய 127 கோடியே மூன்று இலட்சம் ரூபாய் நிலுவைத்தொகை பெற்றுத் தரப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டுக்கென குறிப்பான கடன் உத்தரவாதத் திட்டத்தை 2022-ல் நான் தொடங்கி வைத்தேன். அதன் மூலமாக இதுவரைக்கும் 42 ஆயிரத்து 278 M.S.M.E-க்களுக்கு 7 ஆயிரத்து 578 கோடியே 53 இலட்சம் ரூபாய் கடன்கள் வழங்கப்பட்டிருக்கிறது!

**மிகக்குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுகிறது!**

இந்த தொழில்நிறுவனங்களுக்கு முக்கியமான தேவை மின்சாரம்தான்! தமிழ்நாடு மின்சாரத் துறையால் இப்போது வசூல் செய்யப்படும் தொகையான ஒரு யூனிட்டுக்கு 7 ரூபாய் 65 பைசா என்பது சராசரி விற்பனை அடக்கவிலையைவிட குறைவு! பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது, தமிழ்நாட்டின் அனைத்துவகை நுகர்வோருக்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மிகக்குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குகிறது.

இருந்தாலும், M.S.M.E நுகர்வோர்களின் கோரிக்கைகளை ஏற்று, குறைந்த அழுத்த தொழிற்சாலைகளுக்கான உச்ச நேர நுகர்வுக்கான மின் கட்டணத்தை 25 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைத்தோம்! இதற்காக 607 கோடியே 63 இலட்சம் ரூபாய் கூடுதல் மானியமாக வழங்கியிருப்பதை இந்தத் தருணத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன். இதற்காக நடப்பு நிதியாண்டில் 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்!

அது மட்டுமல்ல, தென்னை நார் தொழில் கொள்கை - தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் - StartUp நிறுவனங்களின் வளர்ச்சிக்கு, புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை என்று அனைத்துத் தொழில்களையும் கவனம் செலுத்தி முன்மாதிரி முயற்சிகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம்!

**அ.தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கிய நிதியைவிட இரண்டு மடங்கு நிதி ஒதுக்கியுள்ளோம்!**

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் M.S.M.E-க்களின் பங்களிப்பை கருத்தில் கொண்டு, இந்த நிதியாண்டில் இந்தத் துறைக்கு ஆயிரத்து 918 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது!

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், கடந்த அ.தி.மு.க ஆட்சியில் பத்தாண்டுகளில், 3 ஆயிரத்து 617 கோடியே 62 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கினார்கள். ஆனால், நம்முடைய அரசில், அதைவிட இரண்டு மடங்காக இப்போது வரைக்கும் 6 ஆயிரத்து 626 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம்!

இங்கு தொழில்துறையினர் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். இந்தக் கூட்டமைப்பின் தலைவர் தொடக்கத்தில் உரையாற்றியபோது ஒரு கோரிக்கை வைத்தார். நிச்சயம் அது பரிசீலிக்கப்படும். கோரிக்கை வைத்த அவருக்கு மட்டுமல்ல, அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்களுக்கும் நானும் ஒரு கோரிக்கையை வைக்கின்றேன். இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டிற்கு நீங்கள் தொழிலில் முன்னேற்றம் காண வேண்டும்! தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மாபெரும் பங்களிப்பை வழங்கி, தமிழ்நாட்டை இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக நிலைநிறுத்த வேண்டும்! அதற்கு உங்களுக்குத் துணையாக நம்முடைய திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கும்! இருக்கும்! என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### இந்து சமய அறநிலையத் துறை சார்பில் – மொத்தம் ரூ.217.98 கோடியில் புதிய பணிகளுக்கு அடிக்கல்நாட்டி

# 33 முடிவுற்ற பணிகளை முதல்வர் திறந்து வைத்தார்!

## கட்டுமானப் பணிகளையும் தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஜூன்.21-*

***முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.6.2025 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 217 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26 திருக்கோயில்களில் 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து, 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் அலுவலகம், 15 ஆய்வர் அலுவலகங்கள் மற்றும் 16 திருக்கோயில்களில் 17 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.***

இந்து சமய அறநிலையத்துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

**26 திருக்கோயில்களில் 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல்**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பெருந்திட்டப் பணிகளின் கீழ் 86.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம், மலர்மாலை, பூஜை பொருட்கள் மற்றும் வழிபாட்டு பொருட்கள் விற்பனை நிலையம், சுதைவேலைபாடுகளுடன் கூடிய நுழைவு வாயில், அடிப்படை வசதிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம், ஒன்பது நிலை இராஜகோபுரத்தினையும், தேர்வீதியினையும் சுதைவேலைபாடுகளுடன் கூடிய இணைப்புபடி கட்டும் பணிகள்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், குமாரவயலூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 30.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்டப் பணிகளின் கீழ் சமுதாயக் கூடங்கள், ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி, நவீன வசதிகளுடன் கூடிய கழிவறைகள் மற்றும் குளியலறைகள், முடிகாணிக்கை மண்டபம், திருமண மண்டபம், அன்னதானக் கூடம், செயல் அலுவலர் குடியிருப்பு, திருக்குளம் சீரமைத்தல், வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணிகள்; திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 14.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைமை அலுவலக வளாகத்தில் கூடுதல் நிர்வாக கட்டிடம் கட்டும் பணி;

திருவள்ளூர் மாவட்டம், பெரிய பாளையம், பவானியம்மன் திருக்கோயிலில் 12.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழு நிலை இராஜகோபுரம், ஐந்து நிலை இராஜகோபுரங்கள் கட்டுதல் மற்றும் மூன்றாம் பிரகாரத்தில் மேற்கு பகுதியில் உபசன்னதிகள் அமைக்கும் பணிகள்; விழுப்புரம் மாவட்டம், சிங்கவரம், அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி: இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயிலில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலில் 6.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; மதுரை மாவட்டம், அழகர்கோவில், கள்ளழகர் திருக்கோயிலில் 5.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பவித்ரபுஷ்கரணி மற்றும் பொய்கை கரைப்பட்டி தெப்பக்குள படிக்கட்டுகள் அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்;

**மாவட்ட கோயில்களில் சீரமைப்புப் பணிகள்!**

அரியலூர் மாவட்டம், உடையார் பாளையம், பயறனீஸ்வரர் திருக்கோயிலில் 4.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப் பாளையம், வனபத்திரகாளியம்மன் திருக்கோயிலின் உபகோயிலான சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 3.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; கடலூர் மாவட்டம், மருதூர், திரு அருட்பிரகாச வள்ளலார் அவதரித்த இல்லம் 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீண்டும் கட்டும் பணி; சென்னை, பாடி, திருவல்லீசுவரர் திருக்கோயிலில் 3.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; திருவண்ணாமலை மாவட்டம், ஆவணியாபுரம், லெட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 3.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், சங்கரநாராயணசுவாமி திருக்கோயிலில் 3.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டடம், அன்னதானக் கூடம் மற்றும் செயல் அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள்; கிருஷ்ணகிரி மாவட்டம், கண்ணம்பள்ளி, வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராஜகோபுரம் புதுப்பித்தல் மற்றும் முன் மண்டபம் கட்டும் பணி;

தென்காசி மாவட்டம், பண்பொழி, திருமலைக்குமாரசுவாமி திருக்கோயிலில் 2.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; கடலூர் மாவட்டம், திருநாரையூர், சுயம்பிரகார ஈஸ்வரர் திருக்கோயிலில் 2.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி; கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு, தேவசம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 2.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டும் பணி; ஈரோடு மாவட்டம், சென்னிமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 2.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலுடன் இணைக்கப்பட்ட கிருஷ்ணன் திருக்கோயிலில் 2.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி;

திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான பூம்பாறை, குழந்தை வேலப்பர் திருக்கோயிலில் 1.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக மூன்று நிலை இராஜகோபுரம் கட்டும் பணி; நாமக்கல் மாவட்டம், மோகனூர், காந்தமலை பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 1.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இளைப்பாறும் மண்டபம் மற்றும் விருந்து மண்டபம் கட்டும் பணிகள்; நாமக்கல், நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 1.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலர் குடியிருப்பு மற்றும் கண்காணிப்பாளர் குடியிருப்பு கட்டும் பணி; தென்காசி மாவட்டம், கரிவலம்வந்த நல்லூர், பால்வண்ணநாதசுவாமி திருக்கோயிலில் 1.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம் கட்டும் பணி மற்றும் பல்நோக்கு கட்டடம் கட்டும் பணி; திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், கொண்டத்து காளியம்மன் திருக்கோயிலில் 1.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அன்னதானக் கூடம் கட்டும் பணி; நாகப்பட்டினம் மாவட்டம், பொய்கைநல்லூர், சொர்ணபுரீஸ்வர சுவாமி திருக்கோயிலில் 1.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பரவை காய்கறி சந்தை கட்டடம் கட்டும் பணி;

என மொத்தம் 217.98 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**உதவி ஆணையர் அலுவலகம், 15 ஆய்வர் அலுவலகங்கள் மற்றும் 16 திருக்கோயில்களில் 17 முடிவுற்ற கட்டுமானப் பணிகளை திறந்து வைத்தல்**

மதுரை மாவட்டம், வேங்கடசமுத்திரம், காட்டுபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 3.70 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய திருமண மண்டபம்; சேலம் மாவட்டம், சேலம், சுகவனேசுவரர் திருக்கோயிலில் 3.60 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய திருமண மண்டபம்; திருவள்ளூர் மாவட்டம், சிறுவாபுரி, பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 3.14 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட திருக்குளம்; திருவண்ணாமலை மாவட்டம், புதூர் செங்கம், மாரியம்மன் திருக்கோயிலில் 2.78 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய திருமண மண்டபம்; 1.98 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விருதுநகர் மாவட்ட உதவி ஆணையர் அலுவலகம் மற்றும் 6 திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகங்கள்; 1.80 கோடி ரூபாய் செலவில் 6 இணை ஆணையர் மண்டலங்களில் கட்டப்பட்டுள்ள 15 சரக ஆய்வர் அலுவலகங்கள்; கோயம்புத்தூர் மாவட்டம், பூண்டி, வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் 1.22 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், பொருட்கள் வைக்கும் அறை மற்றும் காலணிகள் பாதுகாப்பு மையம்; சென்னை, வேளச்சேரி, தண்டீஸ்வரர் திருக்கோயிலில் 1.15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டடம்; திருவண்ணாமலை மாவட்டம், திருவத்திபுரம், வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை, காமாட்சியம்மன் திருக்கோயில், புரிசை, எல்லையம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் 1.14 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு வளாகம் மற்றும் முடிக்காணிக்கை மண்டபம்; மதுரை மாவட்டம், மதுரை, கூடலழகர் திருக்கோயிலில் 99 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம்;

என மொத்தம் 21.50 கோடி ரூபாய் செலவிலான 33 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### 'ஓரணியில் தமிழ்நாடு' கழக உறுப்பினர் சேர்க்கையில் தீவிரமாக ஈடுபட முடிவு!

# திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

திருச்சி, ஜூன் 21-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் 19.06.2025 வியாழக்கிழமை காலை 08.30 மணியளவில் சத்திரம் பேருந்து நிலையம் வி.என். நகர், திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் என்.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு கழகத் தலைவர் - முதல்வர் அவர்களின் வழி காட்டுதலின்படி, கழக உறுப்பினர் சேர்க்கையை 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பின்கீழ் ஒருங்கிணைத்துள்ளது குறித்தும், பி.எல்.ஏ.2, பி.எல்.சி. பணிகள் குறித்து,கழக ஆக்க பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க மொத்த வாக்காளர்களில் 30 சதவீத வாக்காளர்களை கழக உறுப்பினர்களாக சேர்ப்பது என இச்செயற்குழு முழுமணதாக தீர்மானம் நிறைவேற்றுகிறது.

கீழடி அகழாய்வில் கிடைக்கப்பெற்ற தமிழரின் பண்பாடு கலை கலாச்சாரம் பற்றிய ஆவணங்களை ஏற்று அறிக்கை வெளியிட மறுக்கும் ஒன்றிய அரசை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் அமையவிருக்கும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதியை வழங்காமல் காலம் தாழ்த்தும் ஆளுநர் ஆர்.என். ரவியை இச்செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய மதயானை புத்தக வெளியீட்டு விழாவில் நமது முதலமைச்சர் அவர்களால் ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையை எதிர்த்து துணிச்சலுடன் இந்த புத்தகத்தை எழுதியுள்ளார் என பாராட்டியதற்கு நமது அமைச்சர் எப்படி கொள்கை உறுதியுடன் செயல்பட்டு வருகின்றார் என்பதற்கு இதுவே உதாரணம் அவருக்கு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் அதே போல் மதயானை புத்தகத்தை வெளியிட இசைவு தெரிவித்து வருகை புரிந்தமைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இக்கூட்டத்தில் மாநகர செயலாளர் மதிவாணன், தொகுதி பார்வையாளர்கள் கதிரவன், டாக்டர் அண்ணாமலை, மணிராஜ், வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் – பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் நேற்று முன்தினம் (19.06.2025) புதிய விரிவான சிற்றுந்து திட்டம் 2025 நிகழ்ச்சியில் மருங்காபுரி, வையம்பட்டி, துவரங்குறிச்சி மணப்பாறை ஆகிய சுற்று வட்டாரப் பகுதிகளுக்கு சிற்றுந்துகளை இயக்கி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் ப.சுரேஷ்பாபு, த.நடராஜன், போக்குவரத்து வாகன ஆய்வாளர்கள் ச.செந்தில்குமார், சு.செந்தில், பா.அருண்குமார், அ.முகமது மீரான் தி.மு.க. மாவட்ட அவைத்தலைவர் கோவிந்தராஜ் நகரக் கழகச் செயலாளர் மு.ம. செல்வம், ஒன்றியக் கழக செயலாளர்கள் ராமசாமி, ராஜேந்திரன், சீரங்கன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.